# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.slelections.gov.lk* *e-mail : info@slelections.gov.lk*


| | | |
|---|---|---|
| මගේ අංකය :<br>எனது இல. : PRE/2024/09 | ඔබේ අංකය :<br>உமது இல. | දිනය :<br>திகதி : 2024.08.01 |

சுற்றறிக்கை இல - PRE/2024/22

**மிக முக்கியம்**

அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ மாவட்ட செயலாளர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும்
அனைத்து மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும்.

சனாதிபதித் தேர்தல்கள் - 2024
செல்லுபடியான ஆளடையாள அட்டையொன்றை சமர்ப்பிக்காத எவரொவருக்கும் அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காதிருத்தல்.

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளடையாள அட்டையொன்றை சமர்ப்பித்து ஆளடையாளத்தை உறுதிசெய்தல் கட்டாயமான ஒரு தேவைப்பாடாகும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளடையாள அட்டைகள்

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
3. செல்லுபடியான கடவுச்சீட்டு
4. தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவு திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தகவல்களை உறுதிசெய்யும் கடிதம்
5. தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமோர் அடையாள அட்டையை அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை இல்லாத எவரொருவருக்கும் தனது ஆளடையாளத்தை உறுதிசெய்ய முடியாதென்பதால் அஞ்சல்மூலம் வாக்களிக்கின்ற போதும் வாக்காளரொருவராக கருதி செயற்படுதல் கூடாது.

03. அலுவலக அடையாள அட்டை அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் கடந்த தேர்தல்களின் பின்னர் அது தொடர்பில் தெரியவந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இந்த தேர்தலின்போது அஞ்சல் வாக்காளரொருவர் அலுவலக அடையாள அட்டையை சமர்ப்பிப்பாராயின், அஞ்சல் வாக்காளரை இனங்கண்டுக் கொள்ளல் அல்லது ஆளடையாளத்தை பரீட்சித்தல் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகங்களில் அலுவல்களை மேற்பார்வை செய்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அலுவலக அடையாள அடடைக்கு அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படகூடாதென, உங்களினால் அஞ்சல் வாக்கு கண்காணிப்பு அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ ஏனைய அலுவலர்கள் மூலம் அஞ்சல் வாக்கு அலுவல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

04. இது தொடர்பாக அறிவுறுத்தல் வகுப்புக்களிலும் மற்றும் கடிதம் மூலமும் அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை அறிவுறுத்துமாறும், தேர்தல் ஆணைக்குழுவின் தற்காலிக அடையாள அட்டைகள் உள்ளிட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டைகளில் ஏதேனுமொன்றை வைத்திருக்காத ஒருவருக்கு அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் போகுமெனவும் அதற்கமைய செயற்படுமாறும் குறித்த அனைத்து தரப்பினரையும் அறிவுறுத்துமாறும் அறியத் தருகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதி :- தலைமை அலுவலகத்தின் அனைத்துப் பதவிநிலை அலுவலர்களுக்கும் - தயவன்புடன் தகவலுக்காக.